
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1158

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

154

**தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த இரா.சின்னசாமி அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.**

# இரா.சின்னசாமி

# மூத்த முன்னோடி ; முதுபெரும் தொண்டர்!


ஓவியம் : ரவி பேலட்

1984-ஆம் ஆண்டு, இந்தி ஆட்சிமொழிச் சட்டத்துக்கு எதிராக, கழகத் தலைவர் கலைஞர் அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டம், 'மீண்டும் ஒரு மொழிப்போர்' என தமிழ்நாடு தகித்தது. போராட்டத்தில் ஈடுபட்டு, கைதாகிச் சிறை சென்றிருந்த கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர் உள்பட 10 பேர் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர். பதவி பறிக்கப்பட்டு, சேலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த உறுப்பினர்களில் ஒருவர், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் இரா.சின்னசாமி.

தலைவர் கலைஞர் சந்திக்க வருகிறார். "பதவி பறிபோனதை நினைத்து வருத்தமா சின்னசாமி?" என்று கேட்கிறார். "பதவி என்பது தோளின் துண்டு, கொள்கைதான் நமது மானம் காக்கும் வேட்டி" என நீங்கள்தான் கற்றுக்கொடுத்தீர்கள். 1964 - ஆம் ஆண்டு மொழிப்போரில், கீழப்பழுவூர் சின்னசாமி உயிரையே கொடுத்தார். அதைவிடவும் நான் என்ன செய்துவிட்டேன்? தலைவரே!" என கலைஞரை நெகிழவைத்த உடன்பிறப்பு, தருமபுரி சின்னசாமி. மாவட்டக் கழகத்தினர் ஆர்.சி. என அன்போடு அழைத்த மூத்த முன்னோடி.

### 19 வயதில் பொதுவாழ்வு

அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம், தருமபுரியில் 1936-ஆம் ஆண்டு, ஜூன் 6-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் பி.இராம கவுண்டர் - பாப்பம்மாள். தொடக்கக் கல்வியை தருமபுரியிலே முடித்தவர். 17 வயதில் பேரறிஞர் அண்ணாவின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு, 1956-ஆம் ஆண்டில், 19 வயதிலேயே பொதுவாழ்வில் ஈடுபடத் தொடங்கினார்.

1957-இல் கழகம் சந்தித்த முதல் சட்டமன்றத் தேர்தலில், தருமபுரித் தொகுதி கழக வேட்பாளர் பெரியாம்பட்டி குப்புசாமி அவர்களுக்காக மிதிவண்டியிலேயே தொகுதி முழுவதும் பிரச்சாரம் செய்து, கழக முன்னோடிகளின் பாராட்டுகளைப் பெற்றார். மத்தூர் என்கிற ஊரில் பேரறிஞர் அண்ணா கலந்துகொள்ளும் பொதுக்கூட்டத்துக்கு தருமபுரியில் இருந்து 40 கிலோமீட்டர் தூரம் சைக்கிளில் சென்று வந்துள்ளார். அப்படியான மிதிவண்டிப் பயணங்களே, அவரது வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன. குறிப்பாக, தருமபுரி மாவட்டம் என்றால் ஆர்.சி. என்று சொல்லும் அளவுக்கு, அவரது சைக்கிள் கிராமம்தோறும் சென்று வந்தது.

கழகத்தின் தீவிரமான களப்பணியாளராக இருந்த சின்னசாமி, அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக முன்னணியினராக இருந்த சேலம் சித்தையன், 'சேலத்தின் பெரியார்' எனப் போற்றப்பட்ட ஜி.பி. சோமசுந்தரம் ஆகிய முன்னோடிகளிடம் அரசியல் பயின்றவர். அந்த வார்ப்பு, அவரை தீவிரமான சுயமரியாதைக்காரராகச் செயல்பட வைத்தது. தருமபுரி அருகே உள்ள கொளகத்தூர் கிராமத்துக்கு, கொடியேற்றும் நிகழ்ச்சிக்குத் தந்தை பெரியார் ஒரு முறை வந்தபோது, சாலை வசதி இல்லாததால், மாட்டுவண்டியில் அமரவைத்து அழைத்துச் செல்ல திட்டமிட்டனர். மாடு மிரண்டு, வண்டி கீழே விழுந்தால் என்ன செய்வது என கொளகத்தூரைச் சேர்ந்த பெரியசாமியுடன் சேர்ந்து வண்டியை இழுத்துச் சென்றுள்ளார் சின்னசாமி.

### பணிமனையான அரிசி ஆலை

சின்னசாமி அவர்களின் பண்பான அரசியல் பணிகளால், 1959-ஆம் ஆண்டில் தருமபுரி வட்டக் கழகத் துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பேரறிஞர் அண்ணா மீது பெரும் பற்றும் பாசமும் கொண்டிருந்த சின்னசாமி, 1963-இல், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்ற வீரர்களுக்கு, தருமபுரியில் மாபெரும் பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அண்ணாவை அழைத்து வந்து பேச வைத்தார்.

1965-இல், தருமபுரி சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளருக்காகத் தனது அரிசி ஆலையைத் தேர்தல் பணிமனையாக்கினார். பேரறிஞர் அண்ணா, ஏ.கோவிந்தசாமி உள்ளிட்ட கழகத்தினர் வியூகம் வகுப்பதற்கு அந்த அரிசி ஆலையே படைக்கலச் சாலையாக இருந்தது.

1965-ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டம் பிரிக்கப்பட்டபோது, மாவட்ட பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 சட்டமன்றத் தேர்தலில், தருமபுரியில் கழகத்தின் வேட்பாளர் சுப்பிரமணியன் அவர்களை வெற்றிபெற வைக்க, கடும் களப்பணியை மேற்கொண்டவர். அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்று, முதல்முறையாக தருமபுரி மாவட்டம் வருகை தந்தபோது, சின்னசாமியின் இல்லம் வந்து, அவரை பெருமைப்படுத்தினார்.

> **'மூத்த முன்னோடி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதுபெரும் உறுப்பினர், நமக்கு வழிகாட்டி' என அவரது நினைவைப் போற்றினார் இன்றைய கழகத் தலைவர்.**

### சட்டமன்றப் பணி

1971-ஆம் ஆண்டு, கழகத் தலைவராக கலைஞர் தனியாக சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தபோது, தருமபுரி வேட்பாளராக சின்னசாமியை அறிவித்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தார். 35 வயதில் சட்டமன்ற உறுப்பினராகப் பணிகளைத் தொடங்கினார் சின்னசாமி. அதே வேகத்தில், 1972-ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டக் கழக மாநாட்டை கழக நிர்வாகிகளுடன் இணைந்து, சிறப்பாக நடத்திக் காட்டியவரை, 1973-ஆம் ஆண்டில் மாவட்டக் கழகச் செயலாளராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தனர் கழகத்தினர்.

37 வயதில் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்ற சின்னசாமி, தருமபுரி மாவட்டத்தின் தொப்பூர் முதல் ஒசூர் வரை நேரம் காலம் பார்க்காமல் கட்சி வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.

1971-76-ஆம் ஆண்டுகளில், அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், தருமபுரி நகரத்தின் குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க, சின்னாற்றின் குறுக்கே பஞ்சப்பள்ளி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வந்தவர்.

தருமபுரி மாவட்ட மருத்துவமனை அமைப்பதற்கு, சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்து, அதைப் பெற்றுவந்தவர். பஞ்சப்பள்ளி அணையின் உபரி நீரை தருமபுரி ஒன்றியத்தின் கடகத்தூர், கொளகத்தூர், சோகத்தூர் மற்றும் பழைய தருமபுரியில் உள்ள ஏரிகளுக்குக் கொண்டு வர கால்வாய்கள் அமைத்து, விவசாயம் செழிக்க ஏற்பாடு செய்தார். தருமபுரி நகரத்தின் மையத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைக் கொண்டு வந்தது, வேளாண் விற்பனைக்குழு என ஏராளமான மக்கள் பணிகளை நிறைவேற்றினார்.

1976-ஆம் ஆண்டு, மிசா நெருக்கடி காலத்தில் கைது செய்யப்பட்டு, சேலம் மத்திய சிறையில் ஓராண்டுக்காலம் கொடுமைகளை அனுபவித்தவர். 1983-ஆம் ஆண்டில் மீண்டும் மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர், 1984-ஆம் ஆண்டிலும், 1989-ஆம் ஆண்டிலும், தருமபுரியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராகி சாதனை செய்தார்.

1988-ஆம் ஆண்டில் மீண்டும் ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டச் செயலாளராக மாவட்டக் கழகத்தினர் தேர்வு செய்தனர். மாவட்டக் கழகத்தில் இவர் பொறுப்பு வகித்தபோது, வரவு-செலவு கணக்குகளை முறையாகப் பராமரித்து தலைமையிடம் ஒப்படைத்தவர். அந்த நேர்மையைப் பொதுமேடையிலேயே கலைஞர் பாராட்டி இருக்கிறார். 1992-ஆம் ஆண்டில், கழகத்தின் மாநிலத் தணிக்கைக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வந்தவர். அயராத உழைப்பு, கொள்கை உறுதியின் அடையாளமாகத் திகழ்ந்த சின்னசாமி அவர்கள், 2025-ஆம் ஆண்டில் 90 வயதில் இயற்கை எய்தினார். கழக நிர்வாகிகள் கடலெனத் திரண்டு அவருக்கு விடையளித்தனர்.

'மூத்த முன்னோடி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதுபெரும் உறுப்பினர், நமக்கு வழிகாட்டி' என அவரது நினைவைப் போற்றினார் இன்றைய கழகத் தலைவர். வழிகாட்டியாக, வரலாறாகக் கழகத்தில் என்றும் வாழ்வார்.

...துடிக்கும்

## முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வை!

பிரபல மென்பொருள் நிறுவனமான 'ஆரக்கிள்', ஒரே நாளில் 30,000 பேரை பணிநீக்கம் செய்துள்ளது. அதில் இந்தியாவில் மட்டும் 12,000 பேர் வேலையிழந்துள்ளனர். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்தான் இந்த வேலையிழப்புகளுக்குக் காரணம் என விவாதங்கள் எழுந்துள்ள நிலையில், அதை அறவே மறுத்து, தமிழ்நாட்டில் ஏ.ஐ. (A.I.) மூலம் வேலைவாய்ப்புகள் நிச்சயம் பெருகும் என்று பதிவிட்டுள்ளார் பிரின்ஸ் பிரின்கிபாஸ் என்பவர்.

"1980-களில் கணிப்பொறி, அரசு அலுவலகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, 'மனிதனின் எல்லா வேலைகளையும் கணிப்பொறியே இனி செய்துவிடுமாம். இனி, வேலை கிடைப்பதே மிகவும் கடினம்' என்று பரவலாகச் சொல்லப்பட்டதாகச் சொல்வார்கள். ஆனால், நடந்தது என்ன... அதே கணிப்பொறிதான் இத்தனை ஆண்டுகளாக வேலைவாய்ப்புகளையும் சம்பளங்களையும் அள்ளித் தந்திருக்கிறது. கலைஞர் எனும் தொலைநோக்குச் சிந்தனை உள்ள முதலமைச்சர், 1971-இல் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் மூலமாக 'கம்ப்யூட்டரும் அதன் பயன்களும்' என்ற புத்தகத்தை வெளியிட்டு, கணிப்பொறி அறிவியலைப் பரவலாக்க ஆரம்பித்துவிட்டார். இப்போது இதை ஏன் சொல்கிறேன் என்றால், அடுத்த பல வருடங்களுக்கு, முழுவதும் ஏ.ஐ. (A.I.) ஆதிக்கம்தான் என்பதை அறிந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில், 'நான் முதல்வன்' மூலமாக ஏ.ஐ. (A.I.) தொழில்நுட்பப் பயிற்சியை எல்லோருக்கும் அளிக்கவிருப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்.

குறிப்பாக, "செயற்கை நுண்ணறிவுத் துறையின் வளர்ச்சி மற்றும் அதன் போக்குகளை ஆராய்ந்து, வேலையிழப்பு நேரும் துறைகள் எவை என அடையாளம் கண்டு, அத்துறையினருக்கு மாற்றுப் பயிற்சியைப் போர்க்கால அடிப்படையில் அளிப்பது சமூக நீதி அரசின் கடமை. இத்தகைய சூழலை எதிர்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிட முதலமைச்சர் தலைமையில், ஆலோசனைக்குழு அமைக்கப்படும். இந்தக் குழு, 'தமிழ்நாடு ஏ.ஐ. மிஷன் 2.O (A.L. MISSION 2.O) செயல்பட வழிநடத்தும். அனைத்துப் பட்டப்படிப்புத் துறைகளிலும் ஏ.ஐ. (A.I) குறித்த பாடப்பிரிவு இன்றியமையாததாக அமைக்கப்படும். இதன் வாயிலாக, அடுத்த மூன்றாண்டுகளில் ஏ.ஐ. (A.I) அறிந்த பட்டம் படித்த மாணவர்கள் 8 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் இருப்பார்கள் என்று அறிவித்திருக்கிறார். இதற்குப் பெயர்தான் தொலைநோக்குப் பார்வை" என நீள்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்


மருத்துவர் ரியாஸ் முஹம்மது



### டாக்டருக்குக் கை நடுங்கக் கூடாது!

2015-ஆம் ஆண்டில், நான் முதுநிலை மருத்துவம் (MD) பட்டம் பெற்றதும், முதலில் கழகத்தின் அன்றையப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். புகைப்படம் எடுத்துக்கொண்டதும், தலைவர் அவர்களிடம் 'ஒரு செல்பி எடுத்துக்கொள்ள ஆசை' எனக் கேட்டேன். தலைவரைச் சந்தித்த மகிழ்ச்சியில் எனக்கிருந்த படபடப்பு, அவரோடு செல்பி எடுக்கும்போது தெரிந்தது. "ஒரு டாக்டருக்குக் கை நடுங்கக் கூடாது" என்று சொல்லி, தலைவர் கலகலப்பாக்கினார். நான், அறுவைசிகிச்சை செய்யும் ஒவ்வொரு முறையும் தலைவர் கூறியதுதான் நினைவுக்கு வரும்.

**- மருத்துவர் ரியாஸ் முஹம்மது, மருத்துவ அணித் தலைவர், சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும் நினைவுகள் / நல்வருக

### வெற்றிப்பாதையில் நடைபோட்டு...

1967-ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர், சென்னை விருகம்பாக்கத்தில் கழகத்தின் நான்காவது மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் சிறப்புரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. "எனக்குக் கிடைத்திருக்கிற படைக்கருவிகள் தூய்மையாக இருக்கின்றன. கூர்மையாக இருக்கின்றன. தோழமைக் கட்சிகள் துணை நிற்க, வெற்றிப்பாதையில் நடைபோட்டு, உறுதியாகச் செயல்பட்டு இலட்சிய பூமியை அடைவோம்" என்று தேர்தல் பணிகளுக்குக் கழகத்தினரை ஊக்கப்படுத்தினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900